மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கு செயற்குறிப்பு இருந்து வருகிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, பொது மக்கள் தேவையை முன்னிட்டு எக்மோரையும், சென்டிரல் ஸ்டேஷனையும் இணைத்து ஒரு ரயில் பாதை அமைக்க, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கான திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே செய்துள்ள சிபார்சுகளைப்பற்றி முடிவு தெரிந்துகொண்ட பிறகு, மேற்கொண்டு சிபார்சு செய்யலாம்.

New State Transport Buses in Madras City

* 76 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Transport Department has introduced "Go-as-you-please" bus tickets in the city of Madras?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. கே. விநயகம் : சென்னையில் புதியதாக புகுத்தப்பட்டிருக்கிற இந்த முறை, 'கோ ஆஸ் யு ப்ளீஸ்' டிக்கெட்களைப் பொறுத்தவரையில் ஒரு டிக்கெட்டிற்கு எத்தனை கட்டணம் தர வேண்டும்? அதுமாதிரி எத்தனை டிக்கெட்டுகள் வாரந்தோறும் விற்பனையாகின்றன? அது தினந்தோறும் தரப்படுகிறதா அல்லது விடுமுறை நாட்களில் மட்டும் தரப்படுகிறதா? அப்படி பிரயாணிகள் அந்த டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு, வண்டியில் ஏறிக்கொண்டு நாள் முழுதும் பிரயாணம் செய்து கொண்டிருந்தால், அதனால் மற்றவர்களுக்கு தொல்லையாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியவில்லையா? இப்பொழுதே சீர்கேடான முறை இருக்கும்பொழுது இதனால் இன்னும் தொல்லை அதிகமாகும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு எத்தனை காலம் வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வியில் எத்தனை கேள்விகள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு டிக்கெட்டிற்குக் கட்டணம் ரூ. 1½. இது விடுமுறை நாட்களில்தான் விற்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 299 க்கு டிக்கெட் விற்பனையாகிறது. விடுமுறை நாட்களில் இதுபோன்ற பிரயாணம் செய்வதனால் மற்றப் பிரயாணிகளுக்கு எந்தவிதமான கஷ்டமோ, தொல்லையோ ஏற்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : விருப்பம்போல் பிரயாணம் செய்வதற்கான இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். இதேபோல் தமிழகம் எங்கிலும் பல தனிப்பட்டவர்கள் ஆம்னி பஸ்கள் என்று வைத்துக்

1970 ஆகஸ்ட் 27]

கொண்டு நல்ல வருமானம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல் அரசாங்கமும் ஆம்னி பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னை நகரத்தில் ஓடு கின்ற பஸ்களின் மூலம் ஏற்படுகின்ற நஷ்டத்தை இப்படி ஆம்னி பஸ்கள் விடுவதன் மூலம் சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்னி பஸ்களைப் பற்றிய கேள்விக்கும், இந்த மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனவே, இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், சென்னையில் தற் சமயம் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்களுக்காக தனி பஸ்களை விடுகிறார்கள். அதே போன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி இதைப் பற்றியது. அப்பொழுது இந்தக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. டி. மார்டின் : இந்தக் கேள்வியோடு தொடர்பாகத்தான் போடுகிறேன். சென்னையில் லேடீஸ் ஸ்பெஷல் என்று பஸ்கள் விடப்படுகின்றன. அதேபோன்று, இந்த 'கோ ஆப் யு ப்ளீஸ் பஸ் களையும் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்கள் அப்படி சுற்றிவரக்கூடிய அளவில் விடுவதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

(பதில் இல்லை).

*77 Q.—THIRU K. CHEEMAICHAMY;
THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether Government is now contemplating to run special buses in the Madras City for Women only; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை குறிப் பிட்ட சில வழித்தடங்களில், சோதனை அடிப்படையில் மக ளிருக்கும், சிறார்களுக்குமென்றே, தனிப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவை காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரையிலும், மாலை 3-00 மணி முதல் 7-00 மணி வரையிலும், சிறப்பு அறிவிப்புப் பலகைகளுடன் ஓடுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் பேருந்து முயற்சி நல்ல முயற்சி. இதே முறையில் ஜனநெருக்கமுள்ள மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங் களிலும் இந்த மகளிர் பேருந்துகளை விட அரசாங்கம் முன்வருமா? அந்த மகளிர் பேருந்துகளில் மகளிரையே கண்டக்டர்களாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா ?